## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.12.2019 திருவருகைக் காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 02
03.12.2019 புனித பிரான்சிஸ் சவேரியார் - திருப்பலி 03
05.12.2019 புனித பிலிப்பு ரெனால்டி - திருப்பலி 04
06.12.2019 புனித நிக்கோலாஸ் - திருப்பலி 05
08.12.2019 திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 07
09.12.2019 புனித கன்னிமரியாவின் அமல உற்பவம் - திருப்பலி 08
12.12.2019 குவாதலூப் நகர் புனித கன்னிமரியா - திருப்பலி 09
15.12.2019 திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு - திருப்பலி 11
22.12.2019 திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு - திருப்பலி 12
25.12.2019 கிறிஸ்து பிறப்பு பெருவிழா- திருப்பலி 13
26.12.2019 புனித முடியப்பர் - திருப்பலி 14
27.12.2019 புனித யோவான் - திருப்பலி 15
28.12.2019 புனித மாசில்லாக் குழந்தைகள் - திருப்பலி 16
29.12.2019 திருக்குடும்ப விழா - திருப்பலி 18


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. குடும்பமாக வாழ அழைக்கும் இறைவன் 19
2. ஈடில்லா அருளாளர் பிலிப்பு ரெனால்டி 21
3. திருவருகைக் காலத்தை எதிர்கொள்வது எப்படி? 24
4. திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

### 01.12.2019 திருவருகைக் காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. அ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 2: 1-5 II. உரோ. 13: 11-14 மத் 24: 37-44

கிறிஸ்து இயேசுவில் அன்பிற்குரிய சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது ஆண்டவரின் இரண்டாம் வருகையை, எதிர்ப்பார்த்து அதற்கு நம்மைத் தயாரிக்கும் காலமாக "திருவருகைக் காலம்" துவங்குகிறது. இன்றைய முதல் மூன்று வாசகங்களும் இறைமகனின் வருகைக்காக இறைமக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும், எப்போதும் ஆண்டவரின் ஒளியில் நடப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கின்றன. இதனைக் குறிக்கும் வகையில் இன்று "நம்பிக்கை" என்னும் மெழுகுத்திரி ஏற்றப்படுகிறது. இதோ, ஆண்டவர் வழங்கும் மீட்பு நம்மை நெருங்கி வந்துவிட்டது எனத் தலைநிமிர்ந்து நில்லுங்கள். ஆண்டவரை எதிர்கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுக்கிறது.

இன்றைய நற்செய்தியில் "விழிப்பாய் இருக்க" அழைப்பு விடுக்கிறார் இயேசு கிறிஸ்து. விழிப்பாய் இருத்தல் என்பது காத்திருத்தல், மனந்தெளிந்திருத்தல், மனந்திருந்தி இருத்தல் என்னும் பொருள் கொள்ளலாம். முதலில் நாம் நம்மைக் குறித்து விழிப்புணர்வுக் கொள்ள வேண்டும். தன்னை அறியும்போது சக மனிதனைக்குறித்து விழிப்புணர்வு ஏற்படுகிறது. சக மனிதர்களோடு கொண்டுள்ள உறவு பிணைப்பு குறித்து விழிப்பு பெற வேண்டும். சின்னஞ்சிறு சகோதரர்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்று இறைமகன் சக மனிதர்கள் வழியாகவும் இறைவனின் படைப்பு பொருட்கள் வழியாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்ற இறைவனைக் குறித்தான விழிப்புணர்வுப் பெற இறைவனிடம் இத்திருப்பலி வழியாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வின் ஒளியான வானகத் தந்தையே இறைவா, திருஅவைக் குடும்பத்தின் தந்தையாக விளங்கும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களதுவாழ்விலும்பணிகளிலும்உண்மையானகுடும்பஉணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் செயல்படவும், இறைமக்களை ஞானத்தில் வழிநடத்தவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அரசர்களுக்கெல்லாம் அரசரே இறைவா, எங்களை ஆட்சி செய்கின்ற தலைவர்கள் ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பரிவு, நம்பிக்கை, கனிவு ஆகிய வரங்களால் நிரம்பி நாட்டு மக்களை





அன்பும் சமாதானமும் நிறைந்த வாழ்வில் வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. "மனமுறிவை வெறுக்கிறேன்" என்று சொன்ன ஆண்டவரே, எம் பங்கிலுள்ள குடும்பங்கள் ஒன்றித்து வாழவும், பிரிந்த குடும்பங்கள் உறவுகளுடன் மீண்டும் ஒன்று சேர்ந்திடத் தேவையான அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. விழிப்பாய் இருக்க அழைப்பு விடுக்கும் ஆண்டவரே, எம் இளைஞர், இளம் பெண்கள் பேஸ்புக், வாட்ஸ்அப், இன்டர்நெட் போன்ற சமூக வளைதளங்களை தம்முடன் அளவுக்கு அதிகமாக இணைத்துக்கொண்டு தவறான வழிக்குச் செல்லாமல் நீர்தாமே விழிப்புணர்வைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

### 03.12.2019 புனித பிரான்சிஸ் சவேரியார் திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரில் அன்பு கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று நாம் மறைப்பரப்பு பணியின் பாதுகாவலராகிய புனித சவேரியாரின் திருவிழாவினைக் கொண்டாடுகின்றோம். இவர் 1506ல் செல்வந்த குடும்பத்தில் பிறந்து செழிப்புடன் வாழ்ந்து வந்தார். இவருக்கு 2 சகோதரர்கள், 2 சகோதரிகள் உண்டு. இளம் வயதிலேயே தந்தையை இழந்தார். தாயின் அரவணைப்பிலே வளர்ந்தார். 1529ல் பாரீஸில் உயர்கல்வி பயிலச் சென்றபோது இவரது அறையில் முதியவர் லொயோலா இஞ்ஞாசியார் தங்கினார். "ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் வாழ்வையே இழப்பானாகில் அவனுக்குப் பயனென்ன?" என்ற இயேசுவின் வார்த்தைகள் அவரால் போதிக்கப்பட்டன. அதுவே சவேரியாரின் மனமாற்றத்திற்குக் காரணமானது.

உடனே அவர் எளிய ஆடைகளை அணிந்து கடும் நோன்பிருந்து, கயிறுகளால் தன் கால்களைக் கட்டி வலியை அனுபவித்து தவம் செய்தார். பிச்சையெடுத்து அதைக் கொண்டு தன் துறவற வாழ்வைத் துவங்கினார். ஒருவேளை உணவு என்று கடும் தவம் செய்து "ஏழ்மையில் இறைவனைக் காண்பேன்" என்ற உத்வேகத்துடன் இந்தியாவின் கோவா, தஞ்சாவூர், தூத்துக்குடி, நாகர்கோவில், நாகை, சென்னை என்று பல இடங்களில் நற்செய்திக்கு வித்திட்டு, பல அற்புத அடையாளங்களால் தமிழகத்தையே புரட்டிப்போட்ட பின் ஜப்பான் சென்று நற்செய்தி அறிவித்தார். பின்னர் சீனா சென்று வழியில் மலாக்கியில் 1552ல் டிசம்பர் 3 அன்று கடும் நோய்வாய்ப்பட்டு இன்னுயிர் துறந்தார். வாழும்பொழுதே தன் உடல் ஆவி அனைத்தையும் இயேசுக்கு அர்ப்பணித்ததால் மூவொரு கடவுள் அவருக்கு அழியா உடலையும், நித்திய பேரின்ப வீட்டையும், நீண்ட புகழையும் தந்தார். நாமும் இன்றைய இறைவார்த்தையையும் புனிதரின் வாழ்வையும் வாழ்வாக்க முயற்சிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையிலுள்ளவர்களைக் காக்கும் தந்தையே, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் புனித சவேரியாரின் முன்மாதிரியைப் பின்பற்றி நற்செய்தியை தூய ஆவியாரின் வல்லமையோடு, தேவைப்படும் இடங்களைத் தேடிச்சென்று அறிவிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நாட்டிலுள்ள தலைவர்கள் பன்முக கலாச்சாரம் கொண்ட இந்திய தேசத்தில் மதவாதச் செயல்களால், மதத்தின் பெயரால் அரங்கேறும் கொலைகளும், துன்பங்களும், சூறையாடல்களும் அடங்கிய அவலநிலைகள் மாறி, கிறிஸ்துவின் ஒளிபெற்றவர்களாக மனித மாண்பும், அன்பும் நட்புறவும் கொண்ட புனித சமூகமாக எம் தேசம் விளங்க அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இங்கு கூடி செபிக்கும் நாங்கள் நல்ல நிலத்தில் விழுந்த விதையைப்போல இறைவார்த்தையை உள்வாங்கி பலன் தரவும், அந்த பலன் நிலைத்திருக்கவும், நற்செய்தியின் வழியாய் சான்று பகர்வது எங்கள் தலையாய கடமை என்பதை உணர்ந்து வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. மனமாற்றத்திற்காக தங்கள் உடல், உள்ள ஆன்மாவை உமக்குக் கீழ்ப்படுத்த முடியாத கிறிஸ்தவர்களும், பாவ இயல்பை விட்டு வெளியேற முடியாது அடிமைப்பட்டு உலகின் மாயக் கவர்ச்சிகளில் சிக்கி தவிக்கும் இளையோர், சிறுவர்களும், சிற்றின்ப மது போதையில் மூழ்கி குடும்பத்தை இழந்து தவிப்போரும் உம் தூய ஆவியினால் மனமாற்றம் பெற்றிட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 05.12. 2019 அருளாளர் பிலிப் ரினால்டி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் அருளாளர் பிலிப் ரினால்டி அவர்களின் விழாவைக் கொண்டாடுகின்றோம். இவர் இத்தாலியின் அலெக்சாண்டிரியா மாநிலம், லுமன்பொராத்தோ என்னுமிடத்தில் பிறந்தவர், தமது 22ம் வயதில் தொன் போஸ்கோவைச் சந்தித்தபோது அவரால் பெரிதும் கவரப்பட்டார். இவர் குருவாகியவுடன், குருமடத்தில் புதிய மாணவர்களின் உருவாக்கத்திற்கான பொறுப்புகளை ஏற்றார். பின்னாளில் ஸ்பெயின் நாட்டின் சர்ரேயாவின் சலேசியக் குடும்பத்திற்கு இயக்குநராக, தந்தை ரூவா அவர்களால் நியமிக்கப்பட்டார், தொடர்ந்து அதன் மாநிலத் தந்தையாகவும் உயர்த்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டின் சலேசியச் சபையை வளர்த்தெடுப்பதில் இவரது பங்கு அளவிட முடியாது. சலேசிய சபையின் முதன்மை குருவாக உயர்த்தப்பட்டவர், அவரது பணிக்காலத்தில், வேலை செய்யும் இளம் பெண்களின் ஆன்ம, சமூக நலன்களில் துணை நிற்கும் பொருட்டு உருவாக்க மையங்களை





நிறுவினார். உணர்வுப்பூர்வமான, சிக்கல்கள் நிறைந்த காலக்கட்டங்களில் அச்சகத் தொழில்களை நிறுவி, சலேசியச் சகோதரிகளுக்கு சிறந்த வழிகாட்டியாகவும், ஆதரவாகவும் திகழ்ந்தார். சலேசிய உடனுழைப்பாளர் இயக்கத்தில் ஊக்கமும் ஆக்கமும் காட்டி வந்தார்.

அதுமட்டுமல்ல, தந்தை ரினால்டி, உலகில் ஓர் புதிய வடிவமான அர்ப்பண வாழ்விற்கான வாய்ப்பிருப்பதை உணர்ந்து, அதனை நடைமுறைச் சாத்தியமாக்க, "தொன் போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர்கள்" என்ற குழுவை நிறுவினார். 1922ல் சலேசியர்களின் உலகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். தமது காலங்களில் தொன் போஸ்கோவை அப்படியே பின்பற்றி செயல்படுவதில் தமது ஆற்றலனைத்தையும் செலவிட்டார். சலேசிய சபையை வளர்த்தெடுப்பதோடு, சலேசிய ஆன்மீக வாழ்வைப் புதுப்பிப்பதில் பெரிதும் பங்காற்றினார். இவரின் நினைவு நாளை இன்று சலேசியர்களோடு நாமும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் இவ்வேளையில் அவரைப் போன்று நம்முடைய ஆன்மா புனிதத்துவத்தை அடைய தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கடவுளின் திருக்கூட்டமான திருஅவை தன்னுடைய ஆழ்ந்த, நம்பிக்கையால் பலதரப்பட்ட முரண்பாடான அன்றாட வாழ்க்கைச் சூழல்களிலும், வரலாற்று நிகழ்வுகளிலும் உம்மைக் கண்டுணர்ந்து, உம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. திருஅவையில் இன்று செழித்தோங்கும் துறவறக் குடும்பங்களின் தலைவர்கள் நற்செய்தியிலும், சபையை நிறுவியவரின் உள்ளுணர்விலும் அன்புறுதி கொண்டு தங்களுடைய துறவற இல்லங்களை கிறிஸ்துவின் அன்பிற்கேற்ற நிலையில், வாழும் அடையாளங்களாகவும், இறைமக்களை வரவேற்கும் அன்புத் தளங்களாகவும் உருவாக்க வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளாளர் பிலிப்பு ரினால்டியின் முன்மாதிரியைப் பின்பற்றி, இன்றைய சமுதாயத்திலும், திருஅவையின் வாழ்விலும் மேலெழும் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் சலேசிய அவை தன்னுடைய திருத்தூதுப்பணியின் முன்முயற்சிகளை மேன்மேலும் வளரச் செய்ய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 06.12.2019 புனித நிக்கோலாஸ் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறை இயேசுவின் இறைசமூகமே, இன்றைய தினம் நமது திருஅவை புனித நிக்கோலாஸ் புனிதரை நினைவுக் கூறுகின்றது. சின்ன ஆசியாவிலுள்ள லீசியா நாட்டின் பத்தாரா என்னும் நகரில் கிரேக்க

வம்சத்தில் தியோபன்ஸ், நோனா என்னும் தம்பதியருக்கு மார்ச் 15ம் நாள் 270ம் ஆண்டு பிறந்தவர். இயற்பெயரான "சின்டர் கிளாஸ்" என்பதை "சான்டா கிளாஸ்" என டச்சு மாலுமிகள் அழைத்தனர். சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்தார். கல்வி பயின்று மீரா நகரின் மடத்தில் சேர்ந்து குருவானார். பின்னர் மக்கள் இவரை பேராயர் பதவிக்கு நியமனம் செய்தனர். தன்னுடைய குடும்பச் சொத்துகளை திருமணம் செய்ய வசதியில்லாத 3 பெண்களுக்குக் கொடுத்து உதவி செய்தார். ஏழை எளியவர்களுக்கும், சிறுபிள்ளைகளுக்கும் ஏராளமான உதவிகளையும் செய்தார். சிறுபிள்ளைகளை அழைத்து அவர்களுக்கு நிறைய பரிசு பொருட்கள் வழங்குவார்.

ரஷ்ய நாட்டு மக்கள் இவரை மிகவும் சிறப்பித்து வந்தார்கள். டிசம்பர் 6ம் நாள் 342ம் ஆண்டு இவர் இறந்ததும் இத்தாலியின் பாரி நகரில் இவரை அடக்கம் செய்தார்கள். பின் இவரது உடலை மீரா நகரில் பாதுகாத்தனர். கி.பி. 1087ம் ஆண்டு வியாபாரி ஒருவர் இவரது உடலை பாரீஸ் நகருக்கு எடுத்துச் சென்று புனித முடியப்பரின் ஆலயத்தில் வைத்தனர். மணமாகாத வசதியில்லாத பெண்கள் இவரை நினைத்து செபித்து வந்தார்கள். அதற்கான உதவிகள் கிடைத்து திருமணம் நடந்துவிடும். சிறுவர்களின் விஷேச பாதுகாவலராகவும், வியாபாரிகளுக்கும், மாலுமிகளுக்கும் பாதுகாவலராகவும் கிரீஸ் நாட்டு மக்களுக்கு சிறந்த முன்மாதிரியாகவும் திகழ்ந்தார். இவரின் தாராள உள்ளத்தைப் பெற்றிட இறைவனிடம் நாமும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணையின் இறைவா, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தமக்களிக்கப்பட்ட பணியை தூய உள்ளத்தோடும், நீதிநெறி தவறாமலும் செயலாற்றக் கூடிய மனநிலையை அருள வேண்டுமென்று புனித நிக்கோலாஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. "நல்லாயனே இறைவா, சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" என்ற வாக்குத் தத்தத்திற்கு ஏற்ப வாழ்ந்த புனித நிக்கோலாஸ் போல் இறைவனை ஒருவரையொருவர் அன்பு செய்யவும்சந்திக்கும் போதெல்லாம் உண்மையான அன்பைப் பரிமாறிக் கொள்ளவும் வேண்டிய மனநிலையை அளிக்கும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் இறைவா, பல குடும்பச் சூழல் காரணங்களால், மணவாழ்வு கிடைக்காமல், வாழ வழி தெரியாமல் மனந்தளர்ந்து வாழும் மகளிருக்காக மன்றாடுகிறோம். இந்நிலை மாறி அவர்களின் வாழ்வு வளம்பெற புனித நிக்கோலாஸ் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.





## 08.12.2019 திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. எசா 11: 1-10 II. உரோ 15: 4-9 மத் 3: 1-12

நீதி நேர்மையின்படி வாழ்ந்து இயேசு கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவின் அன்பில் உங்களின் நீதி இன்னும் செழித்தோங்க வாழ்த்துகிறோம். திருஅவையானது இன்று திருவருகைக்கால 2ம் ஞாயிறைச் சிறப்பிக்கிறது. மனித வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற சவால்கள், பிரச்சனைகள், சண்டைச் சச்சரவுகள், பிரிவுகள் அனைத்திற்கும் காரணமாய் இருப்பது நாம் உண்மையிலிருந்து தவறுவதுதான். இன்றைய முதல் வாசகத்தில் இஸ்ரயேல் மக்களை மீட்க வரும் மெசியா நீதி வழுவாதவர், நேர்மையோடு தீர்ப்பளிப்பவர், நடுநிலையோடு நடந்துகொள்பவர் என்று அவரின் உண்மைநிலையை எடுத்துக் கூறி அவரின் ஆட்சி அமைதியின் பிறப்பிடமாகவும், சிங்கம், ஆட்டுக்குட்டி, கரடி, பாம்பு என்று எல்லா விலங்குகளும் ஒற்றுமையுடன் பழகும் சமூகமாகவும் விளங்கும் என்று எடுத்துரைக்கிறது.

நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் நீதி, நேர்மை தவறி வாழுகின்ற பரிசேயர், சதுசேயர்களை மனம் மாறுங்கள், ஏனெனில் மீட்பின் நாட்கள் வந்துவிட்டன. தவறு செய்பவர்களின் கழுத்துக்கு வாள் வந்துவிட்டது என்று உண்மையின்படி வாழ அழைப்பு விடுக்கின்றார். இன்று இரண்டாம் வாசகத்தில் பவுல் கூறுவதுபோல் நாம் அனைவரும் ஒருமனப்பட்டவர்களாய் ஆண்டவரைப் புகழ்ந்து கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்வோம் என அழைப்பு விடுக்கிறார். அன்புக்குரியவர்களே, நமது வாழ்க்கையை எண்ணிப் பார்ப்போம். நம்மால் நீதி, நேர்மை தழைத்தோங்க அருள் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் தந்தையே, உம்மால் தேர்ந்தெடுத்து திருப்பொழிவுச் செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உமது தூய ஆவியாரின் ஆற்றலால் நிரப்பி அவர்களின் பணி சிறக்க அருள்புரியும்படி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத் தந்தையே இறைவா, பெற்றோரை மதிக்காத பிள்ளைகளால் மனம் நொந்து வருந்தும் முதியோர்களையும், திருமணம் கைகூடாது காலங்கடந்து குமுறும் பெண்களையும், சமூக இழிவான பேச்சுகளால் மகப்பேறின்றி தவிக்கும் பெண்களையும் நீர் கனிவுடன் கண்ணோக்கும், இவர்களின் மனக்குறையினைப் போக்கி தேவைகளை நிறைவேற்றிட உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் நாயகனே இறைவா, தமிழக மக்களின் நலனுக்காக பாடுபடுகின்ற அனைத்து அரசு அதிகாரிகளையும் நீர் ஆசீர்வதித்து, இவர்கள் தன்னலம் பாராமல், மக்களின் நலன் ஒன்றையே கண்முன்கொண்டு, பணியாற்ற உமது அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞான மேய்ப்பரான இறைவா, இன்றைய சமுதாயத்தில் பல்வேறு தீய வழிகளில் சென்று, தீமையில் உழன்று அல்லல்பட்டு தவிக்கும் எம் இளம் பிள்ளைகளை நீர்தாமே பாதுகாத்து நிறைந்த ஞானத்தைத் தந்து அவர்கள் இறைவார்த்தையைக் கடைபிடித்து வாழ நல்ல மனமாற்றத்தைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 09.12.2019 புனித கன்னிமரியா அமல உற்பவம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. தொநூ 3: 9-15,20 II. எபே. 1: 3-6, 11-12 லூக் 1: 26-38

கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருஅவை தூய கன்னிமரியாவின் அமலோற்பவ விழாவைக் கொண்டாட அழைக்கிறது. நம்முடைய ஆதிப்பெற்றோர் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதால், நாமும் பாவிகளானோம். இதனால் இறை உறவு முறிந்தது. முறிந்த உறவைப் புதுப்பித்து மீண்டும் தந்தையின் அன்புறவில் நாம் இணைய அன்னை மரியாவைக் கருவியாகவும் பாலமாகவும் நம் இறைவன் தேர்ந்தெடுத்தார். அதற்காக சுவக்கின், அன்னம்மாளின் மகளாக, "மரியா"வை சென்மப் பாவமில்லாமல் பிறக்க வைத்தார்."உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்று (தொநூ. 3:15) அறிவித்தபோதே மீட்பராகிய இயேசுவைப் பெற்றெடுக்கும் தாய் மரியா மாசற்றவராக உருவாக்கப்பட்டு விட்டார். கன்னிமரியாவின் "உற்பவத்திருநாள்" உரோமைப் பட்டியலில் 1476ம் ஆண்டுதான் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

1854ம் ஆண்டு விசுவாச கோட்பாடாக வரையறுக்கப்பட்டபின் இத்திருநாள் "அமலோற்பவம்" என்ற பெருவிழாவாயிற்று. தந்தை கடவுள் மரியாவை தொடக்கநிலை பாவத்திலிருந்து விடுவித்து, அருளால் நிரப்பி, இறைமகனுக்கு ஏற்ற அன்னையாக முன்குறித்துப் பாதுகாத்து வந்தார். 1858ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் லூர்து நகரில் மெசபியேல் மலைக் குகையில் பெர்னதெத் சிறுமிக்குக் காட்சியளித்து, "நாமே அமலோற்பவம்" எனக்கூறி அனைத்துலகோர் ஐயங்களையும் அறவே வேரறுத்தார் நம் அன்னை. நம்மை உயர்த்துபவரை நாமும் உயர்த்துவோம் (1சாமு 2:30) என்கிறார் கடவுள். "அருள் மிகப் பெற்றவளே வாழ்க" என கபிரியேல் அதிதூதரால் வாழ்த்தப்பட்டவர் மரியா (லூக் 1:28). உருவிலா இறைமகனைக் கருத்தாங்கிய நிலையில் "இதோ எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" (லூக் 1:48) என்ற இறைவாழ்த்துப்பாடல்





உலகில் எல்லா மனிதரும் மரியாவை உயர்த்துவார்கள் என்பது முன் குறிக்கப்பட்ட இறைச்செய்தியாகும். எனவே, நாமும் பாவம் போக்கி தூய வாழ்வை வாழ அன்னையின் பரிந்துரையை வேண்டி இன்றைய பெருவிழாத் திருப்பலியில் கலந்துகொண்டு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. உண்மையின் உறைவிடமே இறைவா, அன்பின் உண்மையான முகம் இரக்கம். அதைச் செயல்படுத்துகையில் நாம் இயேசுவின் சீடர்களாக மாறுகிறோம் என்னும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்தை ஏற்று ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் ஆகியோர் அன்பின் வழியில் நடந்து இயேசுவின் சீடர்களாக மாறத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, திருத்தந்தை அன்னை மரியாவின் பல்வேறு உன்னத குணங்களை விளக்கி அன்னையற்ற ஒரு சமுதாயம் இதயமற்றதாக, சுவையற்றதாக, கருணையற்றதாக மாறிவிடும் என்கிறார். எந்தவொரு கடினமானச் சூழலிலும் தன் குழந்தைக்காக உயிரையும் தியாகம் செய்து காப்பாற்றும் அன்னையைப் போல் எல்லாத் தாய்மார்களும் தியாக வாழ்வு வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலங்காத்துவாழ்வளிக்கும்இறைவா,சமுதாயத்தால்புறக்கணிக்கப்பட்ட இளம் உள்ளங்களைத்தேடி அவர்களை வழிநடத்துவதிலும், ஒருங்கிணைப்பதிலும், ஆற்றுப்படுத்துவதிலும் அக்கறைக்கொண்டு அருள்பணியாற்றும் அனைவரும் மனவலிமை, தூய்மையான வாழ்வு கொண்டு இளையோரை வழிநடத்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. விடுதலையின் நாயகனே இறைவா, மக்களால் மக்களை ஆள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், தொண்டர்கள், மனித நேய மாண்பினைப் பிரதிபலித்து, நேரிய வழியில் வாழ்க்கை வாழ்ந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வழிநடத்தத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 12.12.2019 புனித குவாதலூப் அன்னை மரியா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

புனித குவாதலூப் அன்னையின் திருநாளை சமீப காலமாக அதாவது 2006ஆம் ஆண்டு முதல் திருஅவை கொண்டாடுகிறது. இதற்கு வழிவகுத்தவர் மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். இருப்பினும் குவாதலூப் கருமை மாமரியின் பக்தி மெக்சிக்கோ நாட்டில் பல நூற்றாண்டு காலமாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் இந்த அன்னையிடம் வந்து வரம் பெற்று செல்கின்றனர். அன்னை மரியாள் ஜீவான் டியேகோ என்ற கருப்பினத்தவருக்குக்

கொடுத்த காட்சிதான் மரியன்னையின் பக்திக்கு ஆரம்பம். அன்னை இவருக்கு மும்முறை காட்சிக் கொடுத்துள்ளார். இரண்டுமுறை ஆயரிடம் அறிவித்தபோது, ஆயர் அதை சரியாக பொருட்படுத்தாமல் பிறகு பார்க்கலாம் என்று டியேகோவை அனுப்பிவிட்டார். மூன்றாம் முறையாக அன்னையே தன்னுடைய உருவத்தை டியேகோவின் துண்டில் பதித்து கொடுத்தார். இது ஆயர் முதல் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் அளித்தது. ஐந்து நூற்றாண்டுகளாக அன்னையின் உருவம் தாங்கிய துகிலை எண்ணிலடங்கா மக்கள் கண்டு செல்கின்றனர்.

அன்னை மரியாள் மற்ற இடங்களில் காட்சிதரும்போது கூறிய சொற்களைவிட இங்கு காட்சித்தந்து "எனதான்மா இறைவனை ஏத்திப் போற்றுகின்றது" என்ற பாடலைப் பாடியது (கூறியது) குறிப்பிடத்தக்கது. பொருட்செல்வம் படைத்தவர்களால் ஒதுக்கப்பட்ட ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், இனத்தால் துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆறுதலாகவும் அரவணைப்பாகவும் இறைவன் இருப்பதைப்போல அன்னை மரியாவும் இருக்கின்றார் என்பதை உணர்த்த இவ்வாழ்த்து மரியாவாள் பாடப்பட்டது. ஏனெனில் அன்னை மரியாள் மக்கள் எங்கு துன்பப்படுகிறார்களோ அவர்களுக்கு பரிவிரக்கம் காட்டுபவள், பரிந்துரைக்கும் பேருபகாரி, எனவே நாமும் நம்மைவிட ஏழ்மை நிலை, துன்ப நிலை, ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களுக்கு இவ்வன்னையின் பரிந்துரை கிடைக்க வேண்டுமென்று இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு தந்தையே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறை சமுதாயத்தைச் சமாதானப் பாதையில், நடத்திட நற்செய்தியின் தூதுவர்களாகவும் நல்ல உடல் நலமும், ஆன்ம பலமும் பெற்று உழைத்திட தூய ஆவியாரின் அருளால் நிரப்பிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நன்மையே உருவான இறைவா, நீர் இவ்வுலக மக்களுக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும் தந்துள்ள அன்னை மரியாவுக்காக நன்றி சொல்வதோடு, அன்னையின்மீது பக்தி கொள்ளவும், அன்னையைப் போன்று தூய்மையான வாழ்வு வாழவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒளியாம் இறைவா, இன்றைய சூழ்நிலைகளில் பல இளைஞர்களும் இளம் பெண்களும் தாங்கள் எதை நோக்கி செல்கிறோம், எப்படி வாழ்கிறோம் என்று நிலையில் வாழ்வின் வழி தெரியாமல் துன்பப்படுகின்றனர். இப்படிப்பட்ட சூழலில் வாழும் அவர்களுக்கு நீர் வழிகாட்டியாக, ஒளியாக இருந்து வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





## 15.12.2019 திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. **D.V.R.** ராஜா

I. எசா 35: 1-6.10 II. யாக் 5: 7-10 மத் 11: 2-11

கிறிஸ்து இயேசுவில் அன்புள்ளம் கொண்ட சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவின் வருகைக்காக உலக மக்கள் அனைவரும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அவரின் வருகையைச் சந்திக்க நாமும் நம்மைத் தயார் செய்துகொள்ளவும், தகுதிப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். சோர்ந்துபோன தளர்ந்துபோன உடல் உறுப்புகளும், உள்ளங்களும் மகிழ்ச்சியும், உவகையும், சந்தோஷமும் அடையும். விவசாயி, விவசாயம் செய்துவிட்டு அறுவடைக்குக் காத்திருப்பதுபோல, நாமும் இயேசுவின் வருகைக்காக பொறுமையோடு காத்திருக்க வேண்டுமென்று இன்றைய வாசகங்களில் காண்கிறோம். மண்ணுலகில் மனிதராய் பிறந்தவருள் பெரியவர் என்று இயேசுவால் பாராட்டப்பட்ட திருமுழுக்கு யோவான் "வரப்போகும் மெசியாவுக்காக வழியைச் செம்மையாக்குங்கள்" என்று போதித்து வந்தார். கிறிஸ்துவின் வருகையால் கிடைக்கும் மகிழ்ச்சியை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் பெற வேண்டுமென்றால் கோபம், பொறாமை, வைராக்கியம், தீய எண்ணம், சோம்பேறித்தனம், காமவெறி போன்ற பள்ளம் மேடுகளைச் செம்மையாக்கி இயேசு வாழ்ந்து காட்டிய மதிப்பீடுகளான அன்பு, நீதி, சமாதானம், ஒற்றுமை, பகிர்வு, விட்டுக்கொடுத்தல், தாழ்ச்சி, பொறுமை போன்ற நற்பண்புகளால் நம்மை அணிசெய்து அவரின் வருகையை மகிழ்வோடும், மனநிறைவோடும் எதிர்கொள்ள வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, எமது திருத்தந்தையின் ஆன்ம சரீர நலன்களைப் பாதுகாத்து நன்முறையில் இறைப்பணியைத் தொடரவும், திருஅவைக்காக உழைக்கும் இருபால் துறவறத்தார் பொதுநிலையினரின் உடல் உள்ள நலன்களைப் பாதுகாத்து உம் இறைப்பணியை நிறைவாக செயலாற்ற ஞானமும் வல்லமையும் பெற்று வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, எமது பங்குத்தந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுகாத்து அவர் செய்யும் பங்குப்பணிகளில் நீரே அவருக்கு ஞானத்தை அளித்து சிறப்பாகப் பணிபுரிய உமதருளைப் பொழிந்து வழிடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் பிறப்பிடமானவரே, எம் இளையத் தலைமுறையினருக்காக மன்றாடுகிறோம். தங்களின் ஆழ்ந்த இறை நம்பிக்கையால் செயல்படுத்தும் அனைத்து செயல்களையும் ஆசீர்வதித்து அவர்களின் இலக்குகளையும், கனவு, எதிர்ப்பார்ப்புகளையும் எளிதாய் அடைந்து வாழ்வில் உயர்ந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அரசர்களுக்கெல்லாம் அரசரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மத இன பேதமின்றி மக்களை சமமாக நடத்தி அவர்களின் தேவைகளை உணர்ந்து, மக்களுக்காய் பணி செய்து நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.12.2019 திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. எசா 7: 10-14 II. உரோ 1: 1-7 மத் 1: 18-25

இறை இயேசுவில் இனியோரே, இன்று நாம் திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறை சிறப்பிக்க வந்துள்ளோம். கடந்த மூன்று வாரங்களாக கிறிஸ்து பிறப்பிற்கு நாம் நம்மை எப்படி தயாரிக்க வேண்டுமென்பதை நற்செய்தி வாசகங்கள் அறிவுறுத்தின. இன்றைய நற்செய்தி வாசகமும், மற்ற வாசகங்களும் கடவுளின் வாக்குறுதியையும், அவர் என்றும் நம்மோடு இருப்பார் என்பதையும் இறைவாக்கினர், வானதூதர் வழியாக அறிவிக்கப்படுவதைக் காண்கின்றோம். இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதிக்கிறார். யாருக்கெல்லாம் நம்பிக்கை இருந்ததோ அவர்களெல்லாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களுக்கு தனது நம்பிக்கையை அறிக்கையிடுகிறார். கிறிஸ்து வையகம் முழுவதும் தனது பிரசன்னத்தைக் கொடுக்கக் கூடியவராய் இருக்கிறார் என்பதை வலியுறுத்துகிறார்.

எவ்வித வேறுபாடுமின்றி எல்லோரும் அவருக்கு கடவுளுக்கு உரியவர்களாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறுகிறார். நற்செய்தி வாசகத்தில் கடவுள் யோசேப்பிடம் தனது மீட்புத்திட்டத்தினை மரியாவின் மூலமாக தொடங்க இருப்பதாக அறிவுறுத்துகிறார். கடவுளிடமிருந்து வந்தவர், மனித உருவில் மனித வரலாற்றில் செயலாற்ற வருகிறார் என்று கூறுகிறார். இத்தகைய இறைவன் இன்னும் சில தினங்களில் மனித உருவில் குழந்தையாய் பிறக்க இருக்கின்றார். அவர் எப்போதும் நம்மோடு இருப்பார் என்ற நம்பிக்கையோடு அவரை வரவேற்கத் தயாராவோம். திருஅவையை இயேசு தம் பேரன்பினால் அன்பு செய்வது போல, நாமும் மனிதர்களை அன்பு செய்து பணிவிடை செய்யும்போது, "கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்பதை உணர முடியும். இத்தகைய மனப்பான்மை நம்மிலும் இருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியாரின் துணையோடு இயேசுவின் சாட்சிகளாக விளங்கிடவும், இறைஇயேசுவின் பணியைத் தொடர்ந்து நடத்திட இவர்களுக்கு உடல்நலமும், ஆன்ம பலமும் தந்து வழிநடத்தவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





2. அன்பே உருவான இறைவா, "உலகம் முடியும் வரை நான் உங்களோடு இருப்பேன்" என்று நீர் சொல்லிய வாக்குறுதியை நாங்கள் விசுவசித்து எங்களுடைய துன்ப துயர நேரங்களில் உம்மையே நோக்கி எங்களுடைய வேண்டுதல்களையும் நம்பிக்கையையும் இருத்திடவும், உமது வாக்குறுதியை என்றும் நினைவு கூர்ந்திடவும் வரம் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. நலன்களின் நாயகனே இறைவா, தூய யோசேப்பு, கபிரியேல் தூதர் கூறிய வார்த்தைகளை இறைவனின் குரலாக ஏற்றுக் கீழ்ப்படிந்தது போலவும் மரியாவுடன் இணைந்து மீட்பின் திட்டத்தில் துணையாக இருந்ததுபோலவும், நாங்களும் திருஅவையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து உலக மக்கள் அனைவரின் மீட்புக்காக உழைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கமே உருவான இறைவா, இவ்வுலகில் அன்புக்காகவும் ஆறுதலுக்காகவும் தனிமையில் துன்பப்படுகிறவர்களிடம் அஞ்சாதே என்று அன்று யாவே கடவுள் கூறியதுபோல இன்றும் இவர்களுக்குக் கூறி உமது அன்பையும், பாதுகாப்பையும், பிரசன்னத்தையும் நற்கருணை வழியாக இவர்கள் பெற்றிட வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.12.2019 கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. எசா 52: 7-10 II. எபி 1: 1-6 யோவா 1: 1-18

இயேசுவின் பிறப்பை நினைத்து அகமகிழ்ந்து அக்களிக்கும் சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துகள். தந்தையாம் கடவுள் விண்ணகம் சார்ந்த ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நமக்குக் கொடுக்க விரும்பினார். இதுவே அவரது மறைவான திட்டம். மாபெரும் விண்ணக பொக்கிஷம் தான் பாலன் இயேசு. இதைவிட சிறந்த பரிசை தந்தையாம் கடவுளால் நமக்கு கொடுக்கவே முடியாது. இந்த பரிசைத் தொலைத்து விடாமல் அனுபவிப்பதுதான் நமது பாக்கியம். இந்த பரிசு உலகத் தொடக்கத்திலேயே இருந்தது, உலகத்தை உண்டாக்கியது. உலக மக்களை மீட்க வல்லது. உலகத்தோர்க்கு ஒளியாக இருக்கிறது. இந்த பொக்கிஷத்தை எந்த இருளும் தீமையும் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அருளும் உண்மையும் நிறைந்து விளங்கிய இந்த பொக்கிஷம் தந்தையின் ஒரே மகன். இவரிடம் மனிதரைப் புனிதராக்கும் ஆற்றல் உண்டு. சாவை அழித்து வாழ்வு தரும் வல்லமை உண்டு. இந்நாளில் இறைவன் நமக்குத் தந்த விலைமதிக்க முடியாத பொக்கிஷமாம் பாலன் இயேசுவை நமது இதயக் குடிலில் வரவேற்போம். நம் இல்லத்திற்கு அழைத்துச் செல்வோம். நம் சமூகத்திற்கும் உறவுகளுக்கும் இந்தப் பரிசைப் பகிர்ந்து மகிழ்வோம். அதற்கான அருளை இத்திருப்பலியில் பெற விழைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவர் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இந்நாளில் கிறிஸ்துவின் அன்பையும், அவர் கொணர்ந்த அமைதியையும் சுமந்து செல்லும் சாட்சிகளாகத் திகழ்ந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. உலக நாடுகளைக் காக்கும் பாலன் இயேசுவே, உமது பிறப்பினால் நீர் கொண்டுவந்த அமைதியும் ஒற்றுமையும் உலக நாடுகளை ஆளும் தலைவர்கள் மேலும் ஆட்சியாளர்கள் மேலும் தங்கி மக்களை ஒன்றுபடுத்தி அமைதிப் பாதையில் நடத்திச்செல்லும் அவர்கள்மேல் தங்கிட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
3. நமது பங்கு, மறைமாவட்டங்களை பாலன் இயேசுவிடம் ஒப்படைத்து செபிப்போம். உமது பிறப்பினால் நீர் கொண்டுவந்த மகிழ்ச்சியும், மீட்பும் ஆவிக்குரிய ஆசி அனைத்தும் எம் பங்கிலும், மறைமாவட்டத்திலும் உள்ள அனைத்து குடும்பங்களிலும் நின்று நிலைபெறவும், உம்மில் பகிர்ந்து பணிந்து வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. எளியோரையும், பாவிகளையும் தேடிவந்த இயேசுவே, எம் நாட்டிலும் உலகெங்கும் உள்ள ஏழைகள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள், உரிமை இழந்தோர், உடல் நலமற்றோர், கைவிடப்பட்டோர், சிறையில் இருப்போர், வறுமை, முதுமையின் பிடியில் உள்ளோர், இயற்கை சீர்கேட்டால் துன்புறுவோர் அனைவரும் நீர் அருளும் மீட்பை வாழ்வில் கண்டு மகிழவும், உம் அரவணைப்பைப் பெறவும் உம்மை மன்றாடுகிறோம்.

## 26.12.2019 புனித முடியப்பர் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விண்ணுலகம் சென்றபின் விசுவாசிகளுக்குப்பணிவிடைச் செய்வதற்காக நற்சான்று பெற்ற, தூய ஆவி அருளும் வல்லமையும், ஞானமும் நிறைந்த எழுவரைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுள் ஒருவர் நம்பிக்கையும், தூய ஆவியும் நிறைந்த ஸ்தேவான். திருத்தூதர்கள் இவர்கள்மேல் கைவைத்து திருப்பொழிவு செய்தார்கள். இந்த திருத்தொண்டர்கள் அனைத்து பணியிலும் திருத்தூதர்களுக்கு உதவியாக இருந்தார்கள். ஸ்தேவான் என்ற கிரேக்க சொல்லுக்கு "முடி" அதாவது "கிரீடம்" என்பது பொருளாகும். எனவேதான் ஸ்தேவானை முடியப்பர் என்று அழைக்கின்றோம். இன்று திருஅவையானது முடியப்பர் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கிறது. இவர் அருளும் ஆற்றலும் நிறைந்தவராய் மக்களிடையே மாபெரும் அற்புதங்களையும் அருங்குறிகளையும் செய்து வந்தார். யூதர்களில் பலர் இந்தப் புனிதரோடு விவாதம் செய்து வந்தனர். இவரைப்பிடித்து இழுத்து யூதர்களின் தலைமைச் சங்கத்துக்குக் கொண்டு சென்றனர்.





இவர் மோயீசனுக்கும் கடவுளுக்கும் விரோதமாக பழித்துரைத்ததாக குற்றம் சாட்டினர். முடியப்பரோ பிரதான குருக்களைக் கடிந்து கொண்டார். "உங்கள் மூதாதையரைப்போல தூய ஆவியை எதிர்க்கிறீர்கள், அவர்களது இறைவாக்கினர்களைத் துன்புறுத்தியதுபோலவே நீங்களும் இயேசுவைக் காட்டிக்கொடுத்து கொன்று விட்டீர்கள்" (திப 7:51-53) என்று துணிந்து உரைத்தார். அவர்கள் கோபங்கொண்டு இவர்மேல் பாய்ந்து பட்டணத்துக்கு வெளியே இழுத்துச்சென்று இவரைக் கல்லால் எறிந்துக் கொன்றார்கள். இவரோ, "ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார். பின் முழந்தாளிட்டு உரத்த குரலில், "ஆண்டவரே, இப்பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதேயும்" என்று மன்றாடி உயிர்த் துறந்தார். நாமும் இப்புனிதரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு மனந்திருந்தி வாழ அருள்வேண்டி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்கள் நல்லாயனாகிய இறைவா, திருஅவை என்னும் பரந்த மந்தையை பாங்குடன் வழிநடத்தும் பொறுப்பை திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினருக்கு தந்துள்ளீர். இறையரசை இவ்வுலகில் கட்டியெழுப்ப இவர்கள் யாவரும் ஒன்றிணைந்து தோழமையுடன் செயல்பட வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. எம் தலைவராகிய கடவுளே, எங்கள் நாட்டுத்தலைவர்களை நல்வழிப்படுத்திட மக்களை அமைதியான, நேர்மையான பாதையில் வழிநடத்திட, அவர்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய பரந்த மனதையும் நல்ல சிந்தனையும் எம் தலைவர்களுக்குத் தந்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. உண்மைக்குச் சான்று பகர்ந்த ஆண்டவரே, உமது வழியைப் பின்பற்றி புனித ஸ்தேவான் வாழ்ந்ததுபோல, நாங்களும் எங்கள் வாழ்வில் உண்மையுடன் வாழவும், அதனால் எங்களுக்கு எதிராக எழக்கூடிய வன்முறைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றவும் வேண்டுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 27.12.2019 புனித யோவான் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

அன்பு இறைமக்களே, நம் தாயாம் திருஅவையானது இன்று நற்செய்தியாளரும் திருத்தூதருமான புனித யோவானின் நினைவைக் கொண்டாடுகிறது. திருமுழுக்குப் பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் பணிகளான போதிக்கும் பணி, மேய்ப்புப்பணி, அர்ச்சிக்கும் பணி என்ற முப்பணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. நாம் விழா கொண்டாடும் புனித யோவான் தன் போதிக்கும் பணியை நற்செய்திப் பணியை மிகவும் சிறப்பாகச் செயல்படுத்தியிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

இவரது இறைவார்த்தை பதிவு மிக ஆழமாக நமக்கு விவரிக்கின்றது. தான் அறிந்ததை அனுபவித்ததை மீண்டும் பிறருக்கு மகிழ்வோடு வழங்குவதைக் காண முடிகிறது. (1யோவா 1:1). இவர் இடியின் மக்களில் ஒருவர் - ஆணித்தரமாக முழக்கமிட்டவர், இறை இயேசுவின் அன்புச் சீடர் - அன்பால் பிணைக்கப்பட்டு உயர்ந்தவர், இறை இயேசுவின் மார்பில் சாய்ந்திருந்தார் - உரிமையை ஏற்றவர், தலைமைக் குருவின் மாளிகையில் நுழைந்து இறை இயேசுவின் நிலையறிந்து அன்பே கடவுள் என்றவர் - நாம் அன்பில் நிலைத்து நிற்க, திருச்சிலுவையின் கீழ் நின்றவர் - மீட்பில் நானும் நீங்களும் பங்கு பெற, திருத்தாயை இறை இயேசுவிடமிருந்து கீழ்ப்படிதலுடன் ஏற்றுக்கொண்டவர். இன்று இது போன்ற ஒரு மாபெரும் பேறு அவரைப்போல் நாம் பெற்றோமா? பெறுவோமா? உள்ளத்தின் ஆழத்தில் சிந்திப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரும் தங்களின் அழைப்பை உணர்ந்து புனித யோவானைப்போல உம்மை அறிந்து, அனுபவித்து, அந்த இறையுணர்வை பிறருக்கும் அளித்து, நிலைத்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய இறைவா, திருமுழுக்குப் பெற்ற அனைவரும் திருஅவையின் திருப்பயணிகள், மண்ணக பயணத்தில் நம்பிக்கையினால் வளர்ச்சிப் பெற்று விண்ணகப் பயணத்தில் இறை தரிசனத்தில் நிலைத்து நிற்க அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.
3. குழந்தையாய் பிறந்த இறைவா, எங்கள் இல்லங்களில் நீர் தவழ வேண்டும். அன்புத் தீ பற்றியெறிய வேண்டும், நாங்கள் உம்மை எங்கள் மார்போடு அணைத்து உரிமைக் கொண்டாட வேண்டும். அன்னை மரியைக் கைவிடாமல் ஏற்று வாழ வேண்டும். அன்பே கடவுள் என பறைசாற்ற அருள்புரிய வேண்டுமென உம்மை வேண்டி மன்றாடுகிறோம்.
4. அமைதி தர வந்தேன் என்ற இறைவா, எத்தனையோ இன்ப துன்ப நேரங்களில் பல்வேறு அழுத்தங்களால் மனமுடைந்த எங்களை அன்பு செய்து அரவணைத்து மன்னித்து வாழ்வைக் கொடுத்து இவ்வாண்டு முழுவதும் நிறைவடையச் செய்துள்ளீர். பிறக்கப்போகும் புதிய ஆண்டும் நல்லாண்டாக, புதுவாழ்வு தரும் ஆண்டாக அமைய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.12.2019 புனித மாசில்லாக் குழந்தைகள் திருப்பலி

**முன்னுரை** திரு. விக்டர்

மாசில்லாக் குழந்தைகளின் திருவிழா திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மாசற்ற குழந்தைகளின் திருவிழாவானது மீட்பர் இயேசு குழந்தையாக பெத்லகேமில் பிறந்த நாட்களில் நடந்த





ஒரு நிகழ்வினை நினைவாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இயேசுவின் பிறப்பால் தனது ஆட்சிக்கு ஆபத்து என்று நினைத்த ஏரோது, இயேசு யார் என்று தெரியாத நிலையில் பெத்லகேமிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளையும் கொலை செய்கிறான். ஆனால் இயேசு எகிப்துக்குத் தூக்கிச் செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டார். இயேசுவுக்காக குழந்தைகள் இறந்த இந்த நிகழ்வைத்தான் "மாசற்றக் குழந்தைகள் தினம்" என்று திருஅவை கொண்டாடி மகிழ்கிறது.

இவ்விழாவானது கி.பி. 5ம் நூற்றாண்டுவரை திருக்காட்சி திருவிழாவோடு இணைந்து கொண்டாடப்பட்டு வந்துள்ளது. அதன் பிறகு குழந்தைகள் தினவிழாவாக டிசம்பர் மாதம் 28ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. இஸ்ரயேல் மக்களின் அடிமை வாழ்விலிருந்து மீட்க எகிப்து மன்னனிடமிருந்து மோசேயைக் கடவுள் காப்பாற்றினார். மக்களை பாவத்தின் அடிமை வாழ்விலிருந்து மீட்க இயேசு காப்பாற்றப்பட்டார். இயேசுவைக் காப்பாற்ற மாசற்ற குழந்தைகள் தங்கள் உயிரைக் கொடுத்தனர். இயேசுவின் மீட்புத் திட்டத்திற்கு உதவினர். தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றி முடித்த நம் ஆண்டவர் இயேசு அதன் நிறைவுப் பணியை நம்மிடம் வழங்கியுள்ளார். நாம் அதனை நிறைவேற்றி முடிப்போம் என்று நம்பியுள்ளார். அவரது நம்பிக்கையை நிறைவேற்ற, செயல்படுத்த நம்மை விட்டுக்கொடுப்போம். அதற்கான வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களுக்காக யாவற்றையும் செய்து முடிக்கும் ஆண்டவரே எம் தந்தையே, இவ்வுகில் எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளை ஆசீர்வதித்து உமது திருவுளத்தை நிறைவேற்றும் பணியில் இவர்களுக்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் வழங்கி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்ற ஆண்டவரே, உமது மீட்பின் பணியில் உமக்கு உதவிய மாசற்ற குழந்தைகளைப்போன்று நாங்களும் நீர் விட்டுச்சென்ற மீட்புப் பணியைத் தொடர்ந்து செய்து முடிக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு ஆண்டவரே, இத்திருப்பலியில் கலந்து கொண்டிருக்கும் யாவரையும் ஆசீர்வதியும். எங்கள் குடும்பங்களில் உமது அன்பும், ஆசியும், நல்ல எண்ணம், விட்டுக்கொடுத்தல், சமாதானம், நம்பிக்கை பெருகிடவும் எங்கள் வாழ்வு உமக்கேற்ற சாட்சிய வாழ்வாக மாறிடவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. குழந்தைகளை ஆசீர்வதித்து காப்பவரே, எங்கள் குடும்பங்களில் உள்ள குழந்தைகளை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், அறிவையும், தெய்வ பக்தியையும், உடல் உள்ள நலத்தையும் வழங்கி சமுதாயத்தில் சிறந்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.12.2019 திருக்குடும்ப விழா ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. சீரா 3: 2-6, 12-14 II. கொலோ 3: 12-21 மத் 2: 13-15, 19-23

மனமகிழ்வுடன் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இன்றைய தினத்தை திருக்குடும்ப விழாவாகச் சிறப்பிக்க நமது திருஅவை நம்மை அழைக்கின்றது. திருக்குடும்பமான இயேசுவும், மரியாவும், யோசேப்பும் இறைவனால் ஆசிப்பெற்றவர்கள். விண்ணகத் தந்தையின் விருப்பத்திற்கிணங்க இறைத் திட்டத்தை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட இக்குடும்பம் திருக்குடும்பமாக உயர்த்தப்பட்டு போற்றிப் புகழப்படுகிறது. கபிரியேல் தூதரின் வாழ்த்துரையைக் கேட்ட அன்னை மரியாள் "நான் ஆண்டவரின் அடிமை" என கூறியபோதும், பிறரின் துயர் துடைக்க தன் மகனிடம் பரிந்து பேசியபோதும், சிலுவை அடியில் நின்றபோதும், மீட்புத்திட்டத்தில் மகனின் வேதனைகளையும், பாடுகளையும் கண்டு துயருற்றபோதும், தான் கடவுளின் அன்னை என்பதை நிரூபித்தவள் நமது அன்னை மரியாள்.

கனவில் தூதரின் வார்த்தைகளைச் செவிமடுத்து இறைவனின் திட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்து, பாலன் இயேசுவையும், அன்னை மரியாளையும் பேணி பாதுகாத்து வளர்த்த மாமுனிதான் யோசேப்பு. "குடும்பம் ஒரு கோவில்", "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற பொன் மொழிகள் இன்றைய திருக்குடும்ப விழாவிற்கு முத்தாய்ப்பாய் விளங்குகின்றன. பெற்றோர்களிடம் தெய்வ பயம் இருந்தால் தன் குழந்தைகளை ஞான வழியில் வளர்க்க இயலும். யோசேப்பும், மரியாளும் இவ்வாறுதான் வாழ்ந்தனர். வானகத் தந்தையின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்த இயேசுவின் கீழ்ப்படிதல் பெற்றோர்களிடமிருந்துதான் வந்தது. இத்தகைய தலைசிறந்த திருக்குடும்ப விழாவைக் கொண்டாடும் நாம் பேறுபெற்றவர்கள். அவர்களைப்போல நம் குடும்பமும் வாழ இத்திருப்பலியில் ஒன்றாக இணைந்து மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, உம் வழித்தோன்றலான எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் திருக்குடும்பத்தின் மேன்மைதனை உணர்ந்து, திருஅவை என்னும் குடும்பம் ஒற்றுமையுடன் செயல்படவும் குறைகளைப் பெரிதுப்படுத்தாமல் அன்பைப் பகிரவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.





2. மன்னிக்கும் மனம் கொண்ட இறைவா, எம் குடும்பங்களில் ஏற்படும் பிரிவினைகள், மனக்கஷ்டங்கள், புரிந்துக்கொள்ளாமை, பொறாமை, மன்னிக்க இயலாமை, விட்டுக்கொடுக்க இயலாமை, பேராசை போன்ற தீய குணங்களை விலக்கி, ஒற்றுமை, அன்பு, சமாதானம் போன்றவற்றைப்பெற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. குடும்பங்களின் தலைவரே எம் இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்களை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். நாங்கள் வாழும் சமுதாயம் ஒரு குடும்பம் என்பதை உணர்ந்து உம்மக்களை தன் குடும்ப உறவுகளாக மதித்து உதவிபுரியும் நல் மனதினைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. வாழ்வளிக்கும் இறைவா, குடும்பங்களில் சுயநலம் காரணமாக முதியவர்களையும் நோயாளிகளையும் சுமையாகக் கருதி அனாதை இல்லங்களுக்கு அனுப்பிவிடும் மனிதரை உமது பேரன்பினால் மாற்றி திருக்குடும்பத்தின் பாசத்தை உணர்த்தி நல்மக்களாக வாழும் வரத்தை அளிக்க உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### குடும்பமாக வாழ அழைக்கும் இறைவன்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

மனித வரலாற்றின் மாபெரும் அமைப்புகளில் ஒன்றாக இருப்பது குடும்பமாகும். ஒருவருக்கொருவர் அக்கரையும், அர்ப்பணமும், விட்டுக்கொடுக்கும் குணமும், புரிந்துக்கொள்ளும் தன்மையும் கொண்ட கணவன், மனைவி, குழந்தைகள் மற்றும் இவர்களோடு இணைந்த ஏனையோரும் சேர்ந்து நெருக்கமான உறவையும், வளங்களையும், பொறுப்புகளையும், தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும், பகிர்ந்து வாழும் ஓர் இல்லிடமாக இருப்பதுதான் குடும்பம். இந்த இல்லிடமாம் குடும்பம் இறையன்பின் கண்ணாடி, ஓர் பல்கலைக்கழகம், அன்பின் கருவூலம். இக்குடும்பம் கடவுளின் படைப்பு. மானிடம் குடும்பமாக வாழ சிந்தித்தவர் கடவுள், மானிடனைத் தம் உருவிலும் படைத்தவர் கடவுள் (தொநூ 1:26,27). ஒருமையில் நிறைவு இல்லை, பன்மையில்தான் நிறைவு உண்டு என்பதை இவ்வசனம் விளக்குகிறது. குடும்பம் அது படைப்பின் அழகு. மனிதரை ஆணும் பெண்ணுமாய் படைத்த இறைவன், பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் என்று கூறுகிறார். இறைவன் மானிடரை ஆசீர்வதிக்கிறார். மேலும் ஒவ்வொரு முறையும் அது நல்லது (தொநூ 1: 12,18,21,25,28) என்று இறைவன் காண்கின்றார்.

ஆனால் ஆண் பெண் என்று மானிடனைப் படைத்து, குழந்தைகளைப் பெற்று பலுகிப் பெருகி பெருகுங்கள் என்று கூறிய கடவுள், இறுதியில் அவை யாவும், மிகவும் நன்றாய் இருந்தன (தொநூ 2: 31) என்கிறார். படைப்பின் மகிழ்வாகவும், படைப்பின் அழகுக்கே மெருகூட்டுவது

மானிடக் குடும்பம் என்று விவிலியம் தெளிவுப்படுத்துகிறது. ஆண்டவர் படைத்த குடும்பம் ஆசீர் நிறைந்துள்ளது அது புனிதத்தின் இருப்பிடம். தூய்மையும் புனிதமும் கமழ்வதால் அது கடவுளின் பெருமையாக அமைகிறது. உலகில் யாவற்றையும் படைக்கும்போது சிந்திக்காத கடவுள் மானிடனைப் (குடும்பத்தை) படைக்கும்போது சிந்திக்கிறார், திட்டமிடுகிறார் என்றால், குடும்பத்தின் மேன்மையையும், கடவுள் குடும்பத்தின்மீது கொண்டுள்ள கரிசனையையும், வார்த்தைகளால் விவரிக்க இயலாது. இந்தக் குடும்பத்தின் அடித்தளம் திருமணம். கருவாக விளங்கும் கணவனும் மனைவியும், குடும்பத்திலிருந்தே உருவாக்கப்படுகின்றனர்.

நல்ல குடும்பத்தின் உருவாக்கத்திற்கும், திருமணத் தம்பதியரை இழிவிலிருந்து காப்பதற்கும், தன்னுடைய குடும்பத்தலைவி தாய் மரியாளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவராய், குடும்பங்களுக்கு முன்மாதிரியாய் புதுமையை நிறைவேற்றினார். நல்ல குடும்பம் மகிழ்வான குடும்பம், விண்ணகத்தின் வாசல். இந்த குடும்பம் என்ற சொல், நாம் அதைப்பற்றி நினைப்பதை விட பேசுவதைவிட, மேலானது. நாம் உணர்வதையும், அனுபவிப்பதையும் எப்போதும் வார்த்தையில் வடித்து விடமுடியாது. குடும்பம் ஒரு குட்டித் திருஅவை என்று கூறுவதற்கு முன்னால் அது குட்டி உலகம் அல்லது சமூகம். அங்கு அன்னையும், தந்தையும், குழந்தைகளும் முதன்மையானவர்கள். தாத்தா, பாட்டி, உற்றார், உறவினர்களும் இன்றியமையாதவர்கள். குடும்பத்தில் ஒவ்வொருவரும் மதிக்கப்பட வேண்டும், அன்பு செய்யப்பட வேண்டும், அன்பு மனிதர்களிடையே நிலவும் தலையாயப் பண்பு. குடும்பத்தில் அன்பு நிலவினால் சமூகத்தில் நலன் கிடைக்கும், வளமைப் பெருகும், அன்பெனும் நூலிலே மனிதரைக் கட்டி ஒன்று சேர்க்கும் உறவெனும் பண்பிலே நம்மை வாழவைத்து மனிதராக்கும்.

இந்த உறவு பிரிக்க முடியாதது. இயேசு திருமண உறவின் முறிவுபடாத் தன்மையை வலியுறுத்துகிறார் (மத் 19:8). அவர், கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் (மத் 19:6).இயேசு திருமணத்தின் முறிவுபடாத் தன்மையை மதித்தார், போற்றினார், பாதுகாத்தார். குடும்பங்களில் தவறு செய்யாத மனிதரில்லை. குடும்பங்களில் இவை அடிக்கடி நடக்கின்றன. கணவன் மனைவி ஒருவர் மற்றவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறுவது, உணர்வுகளைப் புரிந்துக்கொள்ளாமல் இருப்பது போன்ற பல நிகழ்வுகள் மன வருத்தங்களையும், உள்மனக்காயங்களையும் கொண்டு வருகின்றன. காயங்களோடும், மனவருத்தங்களோடும் வாழும் வாழ்க்கை மன அழுத்தங்களைக் கொண்டு வருகிறது. இவைகள் ஆற்றுப்படுத்தப்பட வேண்டும். இதற்கு மாற்று மருந்துகள் உள்ளன. உரையாடல் நடத்துவது, மனந்திறந்து பேசுவது, தவறு கண்டவிடத்து, "மனம் வருந்துகிறேன்", தயவு செய்து," என்று கூறுவது ஒரு நலமான சூழ்நிலையை உருவாக்கும். கணவன், மனைவி, குழந்தைகள், முதியோர்களிடையே இவ்வார்த்தைகள்





ஒலிக்க ஆரம்பித்தால், அமைதி திருமகள் அவ்வீட்டை அலங்கரிப்பாள். இந்த இரண்டு வார்த்தைகளைக் கற்றுக்கொண்டோமென்றால் வாழ்க்கை வளமைப்பெறும். மகிழ்வு நம்மிடம் வந்து தங்கும்.

எல்லாவற்றிக்கும் மேலாக கடவுள் துணையின்றி குடும்பக் கஷ்டங்களை யாராலும் தாங்கிக்கொள்ள இயலாது. கடவுளின் துணையின்றி இறுதிமூச்சுவரை அன்பில் நிலைத்திருக்க முடியாது. கடவுளின் துணையின்றி கணவனும் மனைவியும் ஒருவர் ஒருவருக்கே அருளடையாளமாக விளங்க முடியாது. ஆகவே கடவுள் நம்பிக்கையும், குடும்பச் செபமும், கோயில் வழிபாடும், குடும்ப வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும். அதோடு குடும்பம் அன்பால் அணி செய்யப்பட வேண்டும். குடும்பம் நற்செய்திப் பணி செய்யும் தளமாக இருக்க வேண்டும். சமூக நற்பண்புகளைப் பயிற்றுவிக்கும் பள்ளியாகவும், அழைத்தலின் நாற்றங்காலாகவும், திருத்தூது அழைத்தலின் விளைநிலமாகவும் குடும்பம் இருக்க வேண்டும். குடும்பம் சூழ்நிலைச்சார்ந்த உறவுகளால் அமையவேண்டும். சமூக வளர்ச்சியிலே பங்கேற்க வேண்டும். இயேசு பிறந்து வளர்ந்த குடும்பம் இன்று உலகிற்கு நற்செய்தியாகத் திகழ்வதுபோல் எல்லா குடும்பங்களும் உலகிற்கு நற்செய்தியாக விளங்க வேண்டும். இத்தகைய குடும்பமாக வாழ்வதற்கே இறைவன் நம்மை அழைக்கின்றார், இறை அழைப்பை ஏற்போம், நிறைவாழ்வைப் பெறுவோம்.

## ஈடில்லா அருளாளர் பிலிப் ரினால்டி

திரு. ஜான் அலெக்ஸ்

தொன் போஸ்கோவின் வழியில் 3ம் வழித்தோன்றலாகவும் சலேசிய சபையின் 4ம் உலகத் தலைவராகவும், உலகில் விளங்கியவர். அர்ப்பண வாழ்விற்கான வாய்ப்பிருப்பதை உணர்ந்து, "தொன் போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர்கள்" என்ற அமைப்பைத் துவங்கி அதனை சாத்தியமாக்கியவர் அருளாளர் ரினால்டி அவர்கள். தேவ அழைத்தலுக்கு (துறவறமாக இருந்தாலும் பொதுநிலையாக இருந்தாலும்) பெரிதும் உதவியாக, உடன்பயணித்து வழிநடத்திய மாபெரும் சலேசியர் என்பதை இவரின் வாழ்வு நமக்கு எடுத்துரைக்கிறது. அவற்றில் மிக முக்கியமான சான்றாக, அவரது நெருங்கிய உறவினரும் சலேசிய குருவுமாகிய அருட்பணி பீட்டர் ரினால்டி அவர்களின் குறிப்பேடுகளில் கொடுக்கப்பட்டுள்ளவற்றில் இருந்து ஒரு சில நிகழ்வுகளை மட்டும் இக்கட்டுரையில் நாம் தெரிந்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை.

**ஆன்மீக வாழ்வில் அதி உன்னதர்:** தமது காலங்களில் தொன் போஸ்கோவை அப்படியே பின்பற்றி செயல்படுவதில் தமது ஆற்றலனைத்தையும் செலவிட்டவர். சலேசிய சபையை வளர்த்தெடுப்பதில் பற்பல முயற்சிகளையும் மேற்கொண்டதோடு, ஆன்மீக வாழ்வில் உயர்ந்த

தலைவராக விளங்கினார். சலேசிய உடனுழைப்பாளர்களுக்கு ஊக்கமும் அரவணைப்பும் தந்தார். தொன் போஸ்கோ கல்வி நிறுவனங்களில் பயின்ற இருபாலருக்குமான முன்னாள் மாணவர் அமைப்பினை ஏற்படுத்தியவரும் இவரே.

**உடனிருந்து வழிகாட்டுதலில் முன்மாதிரி:** அக்காலத்தில் கடிதங்கள் வாயிலாகவே பெரும்பாலான தகவல் தொடர்புகள் இருந்தன என்பது நாம் அறிந்ததே. ஆனால் அருளாளர் ரினால்டிக்கு வரும் கடிதங்கள் எத்தகையதாயினும், யாரிடமிருந்து வந்திருந்தாலும் அதற்கு உடனே பதில் கடிதம் அனுப்பாமல் இருந்ததே கிடையாது இது ஒரு சிறந்த பண்பு. ஒருமுறை 1928ல் அருட்தந்தை சீசர் என்பவர் நியு யார்க்கில் உள்ள சலேசிய உயர்நிலை பள்ளிக்கு இயக்குநராக பணியாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். உடனே அவர் அருளாளர் ரினால்டிக்கு கடிதம் எழுதுகிறார். "எனக்கு 28 வயதே ஆகிற நிலையில், ஒரு உயர்நிலைப் பள்ளிக்குப் பொறுப்பாளராகவும் அங்குள்ள சலேசிய குழுமத்திற்கு இல்லத்தந்தையாகவும் பணியாற்றுவது எப்படி சாத்தியமாகும்? அங்கு ஏற்கனவே பணியாற்றும் பலர் என்னைவிட வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களாயிற்றே. தயவு செய்து என்னுடைய இந்த நிலைமைக்கு நீங்கள்தான் ஒரு வழி செய்ய வேண்டும்" என்பது தான் அந்த கடிதம். அருளாளர் ரினால்டி பின்வருமாறு பதிலளிக்கிறார்:

*"நான் உன்னுடைய வயதில் இருக்கும்போது தொன் போஸ்கோ என்னை இதே போன்று ஒரு சலேசிய இல்லத்தின் இயக்குநராக அனுப்பிய நேரத்தில் எனக்கு இருந்த அதே அச்சம்தான் உனக்கும் இருக்கிறது. ஆனால் நான் ஒன்று சொல்கிறேன், "அங்கு நீ அனைத்து அதிகாரமுள்ள இல்லத் தந்தையாக செல்கிறேன் என எண்ணாமல், ஒரு நண்பராக, சகோதரராக, வழிகாட்டும் தந்தையாக.... இணைந்து பணியாற்றவே என்பதை மட்டும் நினைவிற்கொள். சபை பெரியோர்கள் உன்மீது வைத்துள்ள நம்பிக்கையின் வெளிபாடுதான் இது என்பதையும், கடவுள் மீது நீ கொண்டுள்ள நம்பிக்கையையும், அதோடு உன்மீது நீ வைக்கும் உறுதிப்பாட்டினையும் நீ உணர்ந்து செயல்படு.... என் அன்பு சீசர் அவர்களே, இந்த மாபெரும் அழைத்தலை உணர்ந்தவராய், நாளை உம்மிடமிருந்து வரும் ஒப்புதல் கடிதத்திற்காக நான் ஆவலோடு காத்திருப்பேன்..."* என்று கடிதம் எழுதியதை பார்க்கும்போது, இக்கால இளையோருக்கு மட்டுமல்ல ஒவ்வொருவரும் தாங்கள் பெற்ற அழைத்தல் எதுவாக இருந்தாலும், (துறவறமோ... எதுவாயினும்) அதை உணர்ந்து கொள்ள, அவர்களோடு பயணிக்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்வதன் அவசியத்தை அருளாளர் ரினால்டி நன்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பது நமக்குப் புரியும்.

**நானல்ல... இறை திட்டமே இது...:** ஒருமுறை அருளாளர் ரினால்டி உடல்நலம் சோர்ந்து சிகிச்சை பெற்று வருகிற அத்தருணத்திலும் தந்தை





பீட்டர்மீது அவரின் அன்பும் அரவணைப்பும் சற்றும் குறையவில்லை. வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே அவரைச் சந்திக்க வேண்டும் என்று செயலர் நேரம் ஒதுக்கினாலும் அருளாளர் ரினால்டி ஏறக்குறைய 1 மணி நேரம் பாசத்தோடு பேசிக்கொண்டே இருந்தார். குறிப்பாக "பீட்டர், உம் குடும்பத்திற்கு நன்றியோடு இரு... நீ எவ்வளவு ஆசீர்வாதங்களுக்கு உரியவன் என்பதை உணர்ந்து செயல்படு..." என்றார் அருளாளர் ரினால்டி. அதற்கு மறுமொழியாக தந்தை பீட்டர், "அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் நீரே காரணமானவர்" என்றார். "நானல்ல பீட்டர்.... இது இறை திட்டம். கடவுளிடமிருந்து வந்தவை" என்று பதிலளித்தார் அருளாளர் ரினால்டி.

**தொன் போஸ்கோவைப் போலவே ஒரு புனிதர்:** அருட்சகோதரராக பீட்டர், 1931 செப்டம்பரில், தூரினில் சுமார் 300 மாணவர்களைக் கொண்ட தொன் போஸ்கோ சர்வதேச இறையியல் நிறுவனத்தில் இறையியல் பயில அனுமதிக்கப்பட்டார். இங்கு மாணவராகச் சேர்ந்தவர் நான்கு வருடங்கள் படித்து பின்னர் ஒரு குருவாக இவ்விடத்திலிருந்து புறப்படுவோம் என்ற மகிழ்ச்சியோடு, இருந்தார். இந்த காலங்களில் அருளாளர் ரினால்டி அவர்கள் பணியாற்றும் இல்லத்திற்கு அருகில் இந்நிறுவனம் இருந்ததால் அவரை எளிதில் சென்று பார்த்து வரலாம் என்ற இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி அவருக்கு இருந்தது. டிசம்பர் 5, 1931ல் காலை 10.30க்கு அருளாளர் பிலிப் ரினால்டி மறைந்தார் என்ற செய்தி கேட்டதும் உடனே அவரைக் காணச் சென்றார் பீட்டர். அங்கு மேதகு தூரின் பேராயர்-கர்தினால் அவர்கள் அருளாளர் ரினால்டியின் உடலருகே முழந்தாலிட்டு செபித்துக் கொண்டிருந்தார். அருகில் சென்று முழந்தாலிட்ட பீட்டருக்கு தன் கண்களில் வரும் கண்ணீருக்கு தடைபோட முடியவில்லை. மேதகு கர்தினால் அவர்கள், பீட்டரின் தோள்களில் தன் கரங்களை வைத்து ஆறுதலாக, "நீ அழக்கூடாது, அவர் ஒரு புனிதர். தொன் போஸ்கோவைப் போலவே ஒரு புனிதர் எனவே அழுவதை நிறுத்து" என்று சொன்னதை 1990ல் ஏப்ரல் 20ம் நாள், தூய பேதுரு பேராலயத்தில் அப்போதைய திருத்தந்தையோடு இணைந்து திருப்பலி நிகழ்த்தும்போது நினைத்து ஆண்டவருக்கு தன் நன்றியை காணிக்கையாக்கினார்.

**நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை சொல் செய்கிறேன்...:** இதுதான் அருளாளர் ரினால்டி இறப்பதற்கு 2 நாட்களுக்கு முன் பீட்டருக்கு எழுதிய கடிதம், பீட்டருக்கு மட்டுமல்ல நமக்கும், உலகெங்கும் பணியாற்றி வரும் சலேசிய குடும்பத்தினருக்கும் இது பொருந்தும். "அன்பு தந்தை பிலிப் ரினால்டி அவர்களே, கடவுள் என்னை இவ்வுலகத்திலிருந்து அழைக்கும்போது, நான் சிறுவனாக இருக்கும்போது நீர் செய்தது போலவே என் கரத்தைப்பிடித்து கடவுளிடத்திற்கு அழைத்து செல்லும்" என்பது தந்தை பீட்டர் அவர்களின் விண்ணப்பம்.

## திருவருகைக் காலத்தை எதிர்கொள்வது எப்படி?

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, திருவருகைக் காலத்தின் முதல் நாளையே திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கமாக கத்தோலிக்கத் திருஅவை கருதுகிறது. ஆகவே நம்மைப் பொருத்தவரை, டிசம்பர் 1ந்தேதி ஒரு புத்தாண்டு நாளாகும். அன்றுதான் கத்தோலிக்கராகிய நாம் அனைவரும், திருவழிபாட்டின் முதல் பருவமாகிய திருவருகை காலத்தில் நுழைகிறோம். இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு முதல்முறை குழந்தையாக வந்ததன் நினைவைக் கொண்டாடவும், அவர் நீதியரசராக வரவிருக்கும் நிகழ்வுக்காக நம்மைத் தயாரிக்கவும் திருஅவை நமக்கு இக்காலத்தை வழங்கியுள்ளது. ஆகவே திருவருகைக் காலம், இருவித எதிர்பார்ப்புகளின் காலமாக விளங்குகிறது. கிறிஸ்துவின் பிறப்பு விழாவுக்கான எதிர்பார்ப்பு நமக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தருகிறது. இயேசுவின் இரண்டாம் வருகைக்கான எதிர்பார்ப்பு நம்மை அச்சத்திலும் கலக்கத்திலும் ஆழ்த்துகிறது.

கடவுளுக்கு இரண்டு கரங்கள் உண்டு என்று இறையியலாளர்கள் கூறுவார்கள். ஒன்று இரக்கத்தின் கரம், அது மன்னித்து அரவணைக்கும். மற்றது நீதியின் கரம், அது தண்டித்து தீர்ப்பு தரும். கடவுளின் இரக்கத்தின் கரம், இயேசுவின் முதல் வருகையில் வெளிப்பட்டது. அவர் பாவிகளை மன்னித்து, மீட்பின் கொடையாகப் புதுவாழ்வு அளித்தார். இயேசுவின் இரண்டாம் வருகையில், கடவுளின் நீதியின் கரம் வெளிப்படும். அதற்கு முன்பு மனந்திருந்தி வாழாதவர்களுக்கு தண்டனை கிடைப்பது உறுதி திருவருகைக் காலம் என்பது கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தொடங்கிய கிறிஸ்து பிறப்பு தயாரிப்பு முயற்சிகளில் இருந்து வடிவம் பெற்றது. நாம் கடவுளை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால், அவர் நம்மை நோக்கி ஈரடி எடுத்து வைக்கிறார் என்பது சக்கேயுவின் வாழ்வில் இருந்து அறிந்து கொள்கிறோம். இயேசுவைப் பார்க்க மட்டுமே சக்கேயு விரும்பினார். இன்ப அதிர்ச்சியாக, இயேசு அவரது வீட்டிற்கே சென்று மீட்பு வழங்கியதைக் காண்கிறோம். அவ்வாறே, கடவுளை நோக்கி முன்னேற திருவருகைக் காலம் நமக்கு அழைப்பு விடுக்கிறது.

"பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது" (உரோ 5:20) என்று திருத்தூதர் பவுல் கூறுகிறார். மனிதர்களின் வாழ்வு பாவத்தால் நிலைகுலைந்து போன வேளையில், நம்மை மீட்க கடவுளே இவ்வுலகிற்கு குழந்தையாக வந்தார் என்பதே கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு வழங்கும் செய்தி. முதல் வருகையில் இயேசு வழங்கிய நற்செய்தியை வாழ்வாக்க முயன்றால், அவரது இரண்டாம் வருகையைக் குறித்து நாம் சிறிதும் அஞ்ச வேண்டியதில்லை. கிறிஸ்தவ அழைப்புக்குரிய கடமையில் இருந்து தவறும்போது, இயேசுவின் இரண்டாம் வருகையில் அதற்காக கணக்கு





தீர்க்கப்படும். திருவருகைக் காலம் என்பது, நம்மையே புதுப்பித்துக் கொள்வதற்கான ஒரு தயாரிப்புக் காலம். நமது சிந்தனைகளையும் சொற்களையும் செயல்களையும் சீர்தூக்கிப் பார்த்து, அவற்றை கடவுளுக்கு உகந்தவையாக மாற்றியமைக்கும் காலமாக இதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது தவறுகளுக்காக மனம் வருந்த அல்ல, நம்மையே புதுப்பிக்க இக்காலம் நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவரும் அரசருக்கெல்லாம் அரசருமான இயேசுவின் வருகைக்காக நம்மையே தயார் செய்ய அழைக்கப்படுகிறோம்.

மணவாளனுக்காகக் காத்திருக்கும் மணவாட்டியைப் போன்று, திருஅவை இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கும் பருவமாக திருவருகைக் காலம் அமைந்துள்ளது. மணமகள் எவ்வாறு தன்னை முழுமையாக அலங்கரித்துக் கொண்டு திருமணத்திற்குத் தயாராவாளோ, அவ்வாறே கிறிஸ்துவின் முன்பு அழகுடன் திகழத் திருஅவை இக்காலத்தில் தயாரிக்கிறது. விலையுயர்ந்த துணிமணிகளாலும் நகைகளாலும் அல்ல, மாறாக உயர்ந்த எண்ணங்களாலும் செயல்களாலும் நம்மையே அலங்கரித்துக் கொள்ள இக்காலம் தூண்டுகிறது. இயேசு முதல்முறை வந்தபோது, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:14) என வான தூதர்கள் வாழ்த்து பாடினர். யூத சமூகத்தில் பாவிகளாகக் கருதப்பட்ட இடையர்களுக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி முதலில் அறிவிக்கப்பட்டது. விண்ணில் இருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவாகிய இயேசுவை, அவர்கள் தீவனத்தொட்டியில் கண்டு மகிழ்ந்தார்கள். பாவிகளின் மீட்பு இயேசுவில் தொடங்கி விட்டதை, அவரது பிறப்பிலேயே காண்கிறோம். அந்த மீட்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க நம்மில் மனமாற்றம் தேவைப்படுகிறது.

மீட்பரின் வருகைக்காக உலக மக்கள் நான்காயிரம் ஆண்டுகள் காத்திருந்ததாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. விவிலியம் தருகின்ற செய்திகளின் அடிப்படையில், ஆதாமின் தொடக்கப் பாவத்துக்கும் கிறிஸ்துவின் பிறப்புக்குமான இடைவெளி நான்காயிரம் ஆண்டுகள். நான்கு ஆயிரம் ஆண்டுகளை அடையாளப்படுத்தும் நான்கு வாரங்களைக் கொண்டதாக திருவருகைக் காலம் வடிவம் பெற்றுள்ளது. கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு முந்திய நான்காவது ஞாயிறன்று இக்காலம் தொடங்குகிறது. திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு மீட்பரின் வருகைக்காக காத்திருந்த இஸ்ரயேலின் குலமுதுவர்களின் "எதிர்நோக்கு" பற்றி சிந்திக்க அழைக்கிறது. "அமைதி" வழங்கும் மீட்பருக்காக மக்களை இறைவாக்கினர்கள் தயாரித்தது குறித்த சிந்தனையை இரண்டாம் ஞாயிறு வழங்குகிறது. கடவுள் தருகின்ற மீட்பு நெருங்கி வந்துவிட்டதை குறித்து "மகிழ்ச்சி" கொள்ள மூன்றாம் ஞாயிறு நம்மை அழைக்கிறது. மீட்புத் திட்டத்தில் புனித யோசேப்பு - கன்னி மரியா ஆகியோர் "அன்பு" நிறைந்த உள்ளத்தோடு ஒத்துழைத்ததை நான்காம் ஞாயிறு நினைவூட்டுகிறது.

திருவருகைக் காலத்தை அடையாளப்படுத்த 4 மெழுகுத்திரிகளைத் தாங்கிய வளையம் ஆலயத்தில் பயன்படுத்தப்படுகிறது. எதிர்நோக்கு, அமைதி, அன்பு ஆகியவற்றைக் குறிக்கும் முதல், இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களின் 3 மெழுகுத்திரிகள் ஊதா நிறத்திலும், மகிழ்ச்சியைக் குறிக்கும் மூன்றாம் வாரத்தின் மெழுகுத்திரி இளஞ்சிவப்பு நிறத்திலும் உள்ளன. கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி, அமைதியின் அரசரின் வருகைக்காக காத்திருந்து, ஆண்டவரின் மீட்பை நினைத்து மகிழ்ந்து, அன்பால் அவரது திட்டத்துக்கு ஒத்துழைக்க வேண்டும் என்பதை இந்த மெழுகுத்திரிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. இயேசுவின் முதல் வருகையைக் கொண்டாடக் காத்திருப்பது மட்டுமல்ல, அவரது இரண்டாம் வருகைக்காக நம்மைத் தயார் செய்யவும் வேண்டும் என்பதே திருவருகைக் காலம் நமக்கு விடுக்கும் அழைப்பு. மணமகனை எதிர்கொள்ளச் சென்ற முன்மதியுடைய கன்னியர் போன்று, கிறிஸ்துவின் வருகைக்காக எப்பொழுதும் விழிப்பாய் இருக்க வேண்டும் என்று இக்காலம் நமக்கு கற்பிக்கிறது. கிறிஸ்மஸ் கேரல்களிலும், வெளி அலங்காரங்களிலும் கவனத்தைச் சிதறவிடாமல், ஆன்மாவை அழகுபடுத்துவதில் ஆர்வம் கொள்வதே திருவருகைக் காலத்தின் குறிக்கோளை நாம் நிறைவு செய்ய உதவும்.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

இவ்வுலகைக் குறித்த போதிய அறிவோடும், முடிவற்ற வாழ்வு குறித்து போதிய அறிவின்றியும் வாழ்கிறது இக்கால சமூகம் - திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி

### அனைவரையும் உள்ளடக்கும் பொருளாதார அமைப்பு முறைகள் உருவாக்கப்பட

மனிதாபிமானமிக்க பொருளாதாரத்தை ஊக்குவித்து, ஏழ்மையை ஒழிக்க, உலக அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வுலகின் வளங்களை அனைவரும் பயன்படுத்தவும், தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஒவ்வொருவருக்கும் வழங்குவதாகவும் பொருளாதார அமைப்பு முறைகள் இருக்க வேண்டும் எனக் கூறினார் திருத்தந்தை. மனிதரின் ஒன்றிணைந்த வளர்ச்சிக்கு உதவுவதாக முதலாளித்துவம் இருக்க வேண்டுமெனில், ஒரு சிலர் மட்டுமே அனுபவிக்கும் உலக வளங்கள், அனைவருக்கும் கிடைக்க வழிசெய்ய வேண்டும் எனவும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். பயன்படுத்தி, தூக்கியெறியும் ஒரு கலாச்சாரம் என்பது, சமூக நீதியற்ற ஒழுங்குமுறைகளாலும், நன்னெறியற்ற நிலைகளாலும் பிறக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை. உடன்பிறந்த உணர்வுடன் கூடிய பிறரன்பின் முக்கியத்துவத்தை தன்னுரையில் வலிறுத்தினார்.





### பயணம் செய்யும் திருஅவையே உண்மைத் திருஅவை

"அவரின்றி எதுவும் நம்மால் ஆற்ற இயலாது" என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் FIDES கத்தோலிக்கச் செய்தி பத்திரிக்கையாளர் Gianni Valente என்பவர் நடத்திய நீண்ட நேர்முகம் ஒன்று, புத்தக வடிவில், நவம்பர் 5ம் தேதி விற்பனைக்கு வந்தது. தான் இளவயதில் ஜப்பானுக்கு நற்செய்தி அறிவிக்கச் செல்ல விரும்பியதாகவும், பயணம் செய்யும் ஒரு திருஅவையே உண்மையான திருஅவையாக இருக்க முடியும் எனவும் இந்நேர்காணலில் உரைத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இருக்கும் இடத்தைவிட்டு வெளியேறி நற்செய்தி அறிவிக்க முனையவில்லையெனில் அது ஒரு தேங்கிப்போன நிறுவனமாக மாறிவிடும் எனவும், தன் கருத்துக்களைப் பகிர்ந்துக்கொண்டுள்ளார். ஒவ்வொருவரின் நற்செய்தி அறிவிப்புப் பணியிலும், தூய ஆவியாரின் இருப்பை உணரவும், திருத்தூதர்கள் பணி நூலில் கூறப்பட்டுள்ளவற்றைப் புரிந்துக்கொள்ளவும், நாம் அழைப்புப் பெற்றுள்ளோம் எனவும், இப்பேட்டியில் கூறும் திருத்தந்தை, நாம் எவ்வாறு திருஅவையால் கவரப்படுகிறோம் என்பது குறித்தும் விளக்கமளித்துள்ளார். சான்று பகர்வதன் வழியாக திருஅவை வளர்வது குறித்தும் இந்த நேர்முகத்தின்போது குறிப்பிட்டுள்ளத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எவரையும் கட்டாயப்படுத்தி மதம் மாற வைக்கக்கூடாது என்பதையும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

பேதுரு வளாகத்தில் நிறைவேற்றும் திருப்பலியில், கேரளாவின் மரியம் தெரேசியா, பிரித்தானியாவின் கர்தினால் John Henry Newman, சுவிட்சர்லாந்து பொதுநிலை விசுவாசி Marguerite Bays,இத்தாலியின் Giuseppina Vannini, பிரேசில் நாட்டு Dulce Lopes ஆகிய ஐந்து அருளாளர்களை, புனிதர்களாக அறிவிப்பார் திருத்தந்தை பிரான்சிஸ். அன்னை மரியம் தெரேசியா அவர்கள், 1909ம் ஆண்டில் ஐந்து காய வரம் பெற்றிருந்தார். ஆழ்நிலை தியான யோகியாகிய இவர், சாத்தானின் சோதனைகளால் கடுமையான துன்பங்களை அனுபவித்தவர். 1914ம் ஆண்டு மே மாதம் 14ம் தேதி, இவர் ஆரம்பித்த திருக்குடும்ப அருள்சகோதரிகள் சபை, தற்போது 176 இல்லங்களில், 1500 அருள் சகோதரிகளைக் கொண்டிருக்கின்றது. ஏழைகள், நோயாளிகள், தனிமையில் வாடுவோர் போன்றோர் மீது மிகுந்த அக்கறை காட்டிய இவர், தனது 50வது வயதில், 1926ம் ஆண்டு ஜூன் 8ம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

### பாலியல் கொடுமை, எல்லாக் காலங்களிலும் தடைசெய்யப்பட

வருங்காலத்தின் முக்கியத்துவத்தில் மிகுந்த கவனம் செலுத்தினால், வருங்கால அமைதி பற்றி கனவு கண்டால், அமைதி காக்கும் பணிகளில் பெண்களுக்கு அதிக இடம் அளிக்கப்பட வேண்டும்

- திருத்தந்தை பிரான்சிஸ். போர் சூழலில்களில், போரின் ஆயுதமாக பெண்களும் சிறுமிகளும் எதிர்கொள்ளும் பாலியல் வன்கொடுமை பற்றி அடிக்கடி நம் கவனம் செல்கின்றது. ஆயினும் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், இத்தகைய கடுமையான குற்றங்கள் வன்மையாய்க் கண்டிக்கப்பட வேண்டும். அவை, இடம்பெறாதபடி உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மற்றும், அக்குற்றவாளிகள் நீதி விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார், பேராயர் அவுசா.

**போரைச் சித்தரிக்கும் வீடியோ விளையாட்டுகளைத் தடைசெய்ய...**

மதத் தலைவர்கள், மதத்தின் பெயரால் வெறுப்பும் வன்முறையும் பரவுவதைத் தடுக்க வேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்கு, அவர்களுக்கு சமய சுதந்திரம் வழங்கப்பட வேண்டியது மிக முக்கியம். இன்று உலகில் பல இடங்களில் போர்கள் நடந்தாலும், பரவலாக குறிப்பாக, மேற்கு உலகில் அவை பற்றிய அக்கறையின்றி வளர்ந்து வருகிறோம் என்றும், போர் என்ற அச்ச உணர்வை இழந்துவிட்டதுபோல் தெரிகின்றது என்றும் கூறிய பேராயர் யுர்க்கோவிச் அவர்கள், பல சிறார் வன்முறைமிக்க போர் சார்ந்த வீடியோ விளையாட்டுகள் விளையாடுவது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் கூறினார். கொலைகள் மற்றும் அழிவுகள் இடம்பெறும் இந்த விளையாட்டு, ஒரு பொழுதுபோக்காக உள்ளது என்றும், விளையாடுபவர் எவ்வளவுக்குக் கொலை செய்கிறாரோ, அழிக்கிறாரோ அவ்வளவுக்கு அவர் வெற்றி பெற்றவராய் இருக்கின்றார் என்றும் கூறிய பேராயர் யுர்க்கோவிச் அவர்கள், இத்தகைய விளையாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை மற்றும், இவற்றைத் தவிர்ப்பதில் மதங்கள் முக்கிய பங்காற்ற முடியும் என்றும் கூறினார். இந்த வீடியோ விளையாட்டு விதிமுறைகளில் பன்னாட்டு மனிதாபிமான சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கு, பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம், அந்த விளையாட்டுக்களைத் தயாரிப்பவர்களுடன் இணைந்து செயலாற்றத் துவங்கியிருப்பது பாராட்டுக்குரியது என்று பேராயர் தெரிவித்தார்.

**ஆயுத மோதல்கள் சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தும் ஆபத்து**

ஆயுதங்களை உருவாக்குவதற்கு, இயற்கையின் வளங்கள் அழிக்கப்படுவதோடு, அந்த ஆயுதங்களின் பயன்பாட்டால், ஒட்டுமொத்த இயற்கையும் அழியும் நிலையை உலகம் அடைந்துள்ளது. ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் அநீதி - பேராயர் அவுசா.





## சுடர் வாசகர் போட்டி - 65 சரியான விடைகள்

1. 1880, அக்டோபர் 12
2. அருளாளர் மதலேனா மொரானோ
3. திருத்தந்தை 9ஆம் பத்திநாதர்
4. புனித செசிலியாவின் பாடுகள்
5. புனித அந்திரேயா
6. அருளாளர் மதலேனா மொரானோ
7. ஐக்கிய அரபு அமீரகம்
8. அருளாளர் மதலேனா மொரானோ
9. அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி
10. சார்லஸ் பொரோமெயு
11. பான் கீ மூன்
12. 6வயதில் தந்தையும், 8வயதில் தாயையும் இழந்தார்
13. வத்திக்கான் மலை
14. அருளாளர் மதலேனா மொரானோ
15. திருத்தந்தை சில்வெஸ்டர்

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

Sr. Pokisham, Puliadithampam
V. Peter, T.N. Puthugudi
A. George Stephen, Ragavanpettai

## சுடர் வாசகர் போட்டி - 66

1. போர் என்ற அச்ச உணர்வை இழந்துவிட்டது போல் தெரிகிறது என்று கூறிய ஆயர் யார்?
2. புனித பீட்டர் இறையியல் நிறுவனத்தில் இறையியல் பயில எந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டார்?
3. ஆதாமின் தொடக்கப் பாவத்துக்கும், கிறிஸ்து பிறப்புக்கும் இடைப்பட்ட ஆண்டுகள் எத்தனை?
4. "பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது" கூறியது யார்?
5. புனித பிலிப்பு ரினால்டி நிறுவிய குழுவின் பெயர் என்ன?
6. திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு நம்மை எதற்காக அழைக்கிறது?
7. விழிப்பாய் இருத்தல் என்பதன் பொருள் என்ன?
8. குவாதலூப் அன்னை யாருக்கு காட்சி கொடுத்தார்?
9. மரியாவைப் பற்றி முன் குறிக்கப்பட்டச் செய்தி என்ன?
10. டிசம்பர் மாதம் 28ம் தேதி யாருடைய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது?
11. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் நற்செய்தி எது?
12. யாரை அருளும் உண்மையும் நிறைந்த பொக்கிஷம் என்று ஆசிரியர் கூறுகிறார்?
13. இறக்கும் போது "ஆண்டவராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டவர் யார்?
14. திருத்தூது அழைத்தலின் விளைநிலமாக விளங்குவது எது?
15. அன்னையின் உருவம் தாங்கிய துகிலை எத்தனை ஆண்டுகளாக மக்கள் கண்டுச்செல்கின்றனர்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை டிசம்பர் 15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)





## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

கன்னிமரியா இறைவனின் தாய் பெருவிழா
புனித பெரிய பேசில்
இயேசுவின் தூய்மை மிகு பெயர்
ஆண்டவரின் திருக்காட்சி
ஆண்டவரின் திருமுழுக்கு
அருளாளர் தேவசகாயம்
புனித வனத்து சின்னப்பர்
பொங்கல் திருநாள்
பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு
புனித சலேசியார்
திருத்தூதர் புனித பவுலின் மனமாற்றம்
புனிதர்கள் திமொத்தேயு, தீத்து - 3ஆம் ஞாயிறு
புனித தாமஸ் அக்குவினாஸ்
புனித தொன்போஸ்கோ

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

யார் இந்த அருளாளர் தேவசகாயம்?
தமிழர் திருநாள் பொங்கல் விழா
புனித தொன்போஸ்கொ வாழ்வு தரும் பாடம்
திருஅவைச் செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:.................................
முகவரி:................................
.......................................
.......................................
.......................................

## டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ஞா | **திருவருகைக் கால முதல் ஞாயிறு** | I. எசா 2: 1-5<br>II. உரோ 13: 11-14 | மத் 24: 37-44 |
| 2 | தி | புனித பிபியானா | எசா 4: 2-6 | மத் 8: 5-11 |
| 3 | செ | புனித பிரான்சிஸ் சவேரியார் | எசா 11: 1-10 | லூக் 10: 21-24 |
| 4 | பு | தமஸ்கு நகர் புனித ஜான் | எசா 25: 6-10 | மத் 15: 29-37 |
| 5 | வி | **அருளாளர் பிலிப்பு ரினால்டி** | எசா 26: 1-6 | மத் 7: 21, 24-27 |
| 6 | வெ | புனித நிக்கோலாஸ் | எசா 29: 17-24 | மத் 9: 27-31 |
| 7 | ச | புனித அம்புரோஸ் | எசா 30: 19-21, 23-26 | மத் 9: 35,10:1,5-8 |
| 8 | ஞா | **திருவகைக்கால இரண்டாம் ஞாயிறு** | I. எசா 11: 1-10<br>II. உரோ 15: 4-9 | மத் 3: 1-12 |
| 9 | தி | **புனித கன்னி மரியாவின் அமல உற்பவம்** | I. தொநூ 3: 9-15, 20<br>II. எபே 1: 3-6, 11-12 | லூக் 1: 26-38 |
| 10 | செ | புனித மிலிடியாடெஸ் | எசா 40: 1-11 | மத் 18: 12-14 |
| 11 | பு | புனித முதலாம் தமசுஸ் | எசா 40: 25-31 | மத் 11: 28-30 |
| 12 | வி | குவாதலூப் புனித கன்னி மரியா | எசா 41: 13-20 | மத் 11: 11-15 |
| 13 | வெ | புனித லூசி | எசா 48: 17-19 | மத் 11: 16-19 |
| 14 | ச | சிலுவையில் புனித ஜான் | சீரா 48: 1-4, 9-11 | மத் 17: 9-13 |
| 15 | ஞா | **திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு** | I. எசா 35: 1-6, 10<br>II. யாக் 5: 7-10 | மத் 11: 2-11 |
| 16 | தி | புனித அடலெய்டே | எண் 24: 2-7, 15-17 | மத் 21: 23-27 |
| 17 | செ | புனித லாசெரஸ் | தொநூ 49: 2,8-10 | மத் 1: 1-17 |
| 18 | பு | புனித வைன்பால்ட் | எரே 23: 5-8 | மத் 1: 18-24 |
| 19 | வி | புனித நெமேஸியுஸ் | நீதி 13: 2-7, 24-25 | லூக் 1: 5-25 |
| 20 | வெ | புனித சிலோசின் டோமினிக் | எசா 7: 10-14 | லூக் 1: 26-38 |
| 21 | ச | புனித பீட்டர் கனிசியுஸ் | இபா 2: 8-14 | லூக் 1: 39-45 |
| 22 | ஞா | **திருவருகைக் கால நான்காம் ஞாயிறு** | I. எசா 7: 10-14<br>II. உரோ 1: 1-7 | மத் 1: 18-25 |
| 23 | தி | கான்டி நகர்ப் புனித ஜான் | மலா 3: 1-4, 23-24 | லூக் 1: 57-66 |
| 24 | செ | புனித ஆடெல் | 2சாமு 7: 1-5,8-12,14,16 | லூக் 1: 67-79 |
| 25 | பு | **கிறிஸ்துமஸ் பெருவிழா** | I. எசா 52: 7-10<br>II. எபி 1: 1-6 | யோவா 1: 1-18 |
| 26 | வி | புனித முடியப்பர் | திப 6: 8-10, 7: 54-60 | மத் 10: 17-22 |
| 27 | வெ | புனித யோவான் | 1யோவா 1: 1-4 | யோவா 20: 1-8 |
| 28 | ச | **புனித மாசில்லாக் குழந்தைகள் தினம்** | 1யோவா 1: 5-2:2 | மத் 2: 13-18 |
| 29 | ஞா | **திருக்குடும்பம்** | I. சீரா 3: 2-6,12-14<br>II. கொலோ 3: 12-21 | மத் 2: 13-15, 19-23 |
| 30 | தி | புனித சபீனஸ் மற்றும் தோழர்கள் | 1யோவா 2: 12-17 | லூக் 2: 36-40 |
| 31 | செ | புனித முதலாம் சில்வெஸ்டர் | 1யோவா 2: 18-21 | யோவா 1: 1-18 |